**SC.183/2017**

அ.சா.**1** சரண்யா

20-06-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**(நான் சென்னை நீதிமன்ற வளாகத்திலிருந்து காணொலி மூலமாக சாட்சியம் அளிக்கிறேன். எனது அடையாளத்திற்காக ஆதார்கார்டை காண்பிக்கிறேன். காணொலி மூலமாக எதிர்முனையில் உதவியாளர் உமாதேவி, Assistant Programmer, Chennai City Civil Court உடன் இருந்தார்.)**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

அதன் பின்னிட்டு தினசரி நாளிதழ்மூலமாக எனது அப்பாவை கொலை செய்தவர்களை போலீசார் பிடித்து விட்டதாக தெரிந்து கொண்டோம். அந்த தினசரி நாளிதழில் எனது தந்தைக்கு கோயமுத்தூரில் உள்ள ராம் லட்சுமண் நகரில் 15 செண்ட் இடம் இருந்தது. அந்த இடத்தை அபகரிக்க வேண்டுமென்று எனது தந்தையிடமிருந்து போலியாக பவர்ஆப் அட்டார்னி பெற்று நிலத்தை அபகரித்துக் கொண்டு ஒரு சேன்ட்ரோ காரில் அழைத்துச் சென்று அவரை கொலை செய்ததாக பேப்பரைப் படித்து தெரிந்து கொண்டேன். கோயமுத்தூரில் உள்ள நஞ்சுண்டாபுரத்திலும் எனது தந்தைக்கு 49 செண்ட் இடம் இருந்தது. அந்த இடத்திற்கும் எனது தந்தையிடமிருந்து பவர்ஆப் அட்டார்னி வாங்கியிருந்தார்கள். மேலே சொன்ன இரண்டு இடங்களையும் எனது தந்தையிடமிருந்து அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் அவரை கடத்தி நிலத்தை அபகரித்துக் கொண்டு அவரை கொலை செய்து விட்டார்கள். எனது தந்தையை பார்க்க வீட்டிற்கு அடிக்கடி வருபவர்தான் நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் எதிரியாகும்.அவரது பெயர்

வெங்கிடசுப்பிரமணியம். (சாட்சி அவர் போட்டிருக்கும் உடை வெள்ளை நிறமாக உள்ளது என்று காணொளி வாயிலாக பார்த்து கூறுகிறார். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகைப்படம் எனது தந்தையின் புகைப்படம் ஆகும். அது சா.பொ.7 (2 எண்ணிக்கைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பிரவுன் கலர் டேப் மூலமாகத்தான் எனது அப்பாவை கொலை செய்து சுருட்டி ஒட்டியிருந்தார்கள். அது சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை இரு முறை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:-

07-11-2009 க்கு முன்பாக நான் சென்னையில்தான் படித்து வந்தேன். 2009 ல் நான் செல்போன் வைத்திருந்தேன். அந்த செல்போன் எண் தற்போது எனக்கு நினைவில்லை. உண்மை வெளி வந்து விடும் என்ற காரணத்திற்காக எனது செல்போன் எண்ணை நினைவில்லை என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் படிக்கும்பொழுது 17 வருடங்களுக்கு முன்பாக அந்த செல்போனை பயன்படுத்தி வந்ததால் தற்போது அந்த எண் எனக்கு ஞாபகமில்லை. எங்கள் வீட்டில் குடியிருந்த பாலசுந்தரத்தின் மகள் வனஜா எங்களுக்கு செல்போன் எண் மூலமாகத்தான் தகவல் கொடுத்தார். பாலசுந்தரத்தின் செல் நெம்பரும் தற்பொழுது எனக்கு நினைவில்லை. சிறிது நாட்களில் அவரும் காலமாகி விட்டார். உண்மை வெளி வந்துவிடும் என்ற காரணத்தினால் அவரது செல்போன் எண்ணும் எனக்கு நினைவில்லை என்று

தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சகோதரி சத்தியாவும் செல்போன்அப்பொழுது வைத்திருந்தார். ஆனால் அவர் பயன்படுத்தி வந்த எண்ணும் தற்போது எனக்கு ஞாபகமில்லை. வழக்கின் உண்மை வெளிவந்து விடும் என்ற காரணத்திற்காகத்தான் அந்த எண்ணையும் தெரியாது என்று நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2009ல் எனது அக்கா கணவர் மதனுக்கும் செல்போன் இருந்தது. அந்த எண்ணும் எனக்கு தற்போது நினைவில்லை. வழக்கின் உண்மை வெளிவந்து விடும் என்ற காரணத்திற்காகத்தான் அந்த எண்ணையும் தெரியாது என்று நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கும்பொழுது ஆரம்பத்தில் அந்த எண்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளேன். போலீசார் விசாரிக்கும்பொழுது எனது சகோதரி மேலே குறிப்பிட்ட 4 செல்போன் எண்களையும் போலீசாரிடம் கொடுத்திருப்பார். அந்த 4 செல்போன் எண்கள் எந்த கம்பெனியைச் சேர்ந்தது என்று போலீசார் விசாரித்து தெரிந்து கொண்டார்கள் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை இறந்து போய் 15 வருடங்கள் ஆகிவிட்டது என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்திலும் எதிரியை என்னிடம் காட்டினார்கள். 15 வருடங்கள் கழித்து போலீசார் சொல்லிக் கொடுத்துதான் எதிரியை நான் தற்பொழுது அடையாளம் காட்டுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவரை எனக்கு தெரியும். தகவல் தெரிந்ததும் சென்னையிலிருந்து பஸ்ஸில் கிளம்பி கோயமுத்தூருக்கு வந்தேன். அன்றைய தினம் நான் கோயமுத்தூருக்கு வரவில்லை என்றும், அவ்வாறு வந்திருந்தால் பேருந்து டிக்கெட்டை போலீசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எனது

அப்பாவின் செல் நெம்பர் 9786131020 ஆகும். இந்த எண் எனது தந்தை பயன்படுத்தியதில்லை என்றும், காவல் துறையினரால் அறிமுகப்படுத்திய என்னை எனது தந்தையின் செல்போன் எண் என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த செல்போன் எண்ணுக்கு மாதாமாதம் என் தந்தை பணம் கட்டுவார் என்றால் சரிதான். அந்த செல்போன் எண் எந்த கம்பெனியைச் சேர்ந்தது என்று தற்போது நினைவில்லை. வழக்கின் உண்மை வெளிவந்து விடும் என்ற காரணத்திற்காகத்தான் அது எந்த கம்பெனி எண் என்று தெரியாது என்று நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் படிக்கும்போது இருந்த செல் நெம்பருக்கு எனது தந்தை உயிரோடு இருக்கும்வரை எனக்கு கொடுத்த பணத்திலிருந்து நான் செலுத்தி வந்தேன். நான் அப்பொழுது வைத்திருந்த செல் எண் ஏர்டெல் கம்பெனியைச் சேர்ந்தது. சம்பவ சமயத்தில் எனது தந்தை விருப்ப ஓய்வு பெற்று வீட்டில்தான் இருந்தார். அப்பொழுது அவருக்கு வயது 58 இருக்கலாம் என்று சொன்னால், 58 லிருந்து 61 இருக்கலாம், எனக்கு சரியாக நினைவில்லை. அவர் 6 அடிக்கு குறைவாகத்தான் இருப்பார். சா.பொ.7 புகைப்படம் பாஸ்போர்ட் வகையைச் சேர்ந்ததாக தெரிகிறது. அது போலீசார் கேட்டு நாங்கள் கொடுத்ததாக தெரிகிறது. சம்பவ சமயத்தில் வேறு புகைப்படங்களும் எங்கள் வீட்டில் இருந்தது. சா.பொ.7 புகைப்படம் எனது தந்தையின் புகைப்படம் அல்ல என்று சொன்னாட்ல சரியல்ல. நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் அடையாளம் காட்டிய கால் ஷூக்கள், சாக்ஸ்கள், பெல்ட், சட்டை ஆகியவை எனது தந்தையினுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. போலியாக தயாரிக்கப்பட்ட பவர்ஆப் அட்டார்னியைப் பற்றி எனக்கு நேரடியாகத்

தெரியாது என்று சொன்னால், அதை வில்லங்கச் சான்றிதழ் எடுத்துப் பார்த்துதான் தெரிந்து கொண்டோம். பவர்ஆப் அட்டார்னி போலியாக தயாரிக்கப்பட்டதாக வழக்கிற்காக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பவர்ஆப் அட்டார்னியில் எனது தந்தையின் புகைப்படத்திற்கு பதிலாக வேறு ஒரு புகைப்படத்தை ஒட்டி பதிவு செய்திருந்த காரணத்தினால் அது போலியானது என்று நாங்கள் தெரிந்து கொண்டோம். வேறு ஒரு புகைப்படத்தை ஒட்டி போலியாக தயார் செய்தததாக நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. எந்த தமிழ் நாளிதழில் எனது தந்தையின் இறப்பைப் பற்றி தெரிந்து கொண்டேன் என்று தற்போது எனக்கு நினைவில்லை. தினசரி நாளிதழைப் பார்த்துத்தான் எனது தந்தை இறந்து விட்டதாக நான் தெரிந்து கொண்டேன் என்று கூறுவது தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தைக்கும், திருப்பூர், அவினாசி காவல் நிலைய கு.எண்.1610/2009 ல் கண்டெடுக்கப்பட்ட நபருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் இந்த வழக்கை தவறாக நடத்தி, எனக்கு சொல்லிக் கொடுத்து, அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கைப் பற்றி எதுவும் நேரடியாகத் தெரியாது என்றும், போலீசார் சொல்லிக் கொடுத்து எனது தந்தையின் செல்போன் எண்ணை வழக்கில் தொடர்புபடுத்த கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. 10-07-2010 ஆம் தேதியுள்ள நாளிதழில்தான் எனது தந்தையின் இறப்பைப் பற்றி நான் தெரிந்து கொண்டேன் என்று சொன்னால், எனக்கு அதைப் பற்றி ஞாபகமில்லை. சில உண்மைகளை மறைத்தும், போலீசார் சொல்லிக் கொடுத்து சில விஷயங்களையும் வழக்கிற்காக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. காவல்

நிலையத்தில் வைத்து நான் சேன்ட்ரோ வண்டியை பார்க்கவில்லை. தினசரி நாளிதழில் எதிரி சான்ட்ரோ காரில் எனது தந்தையை அழைத்துச் சென்று கொலை செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக போடப்பட்டிருந்தது. அதனால் சேன்ட்ரோ காரைப் பற்றி நான் கூறினேன். எனது அப்பாவின் இறப்பைப்பற்றிய விஷயத்தை நாளிதழில் தெரிந்து கொண்டு ஆனால் அந்த நாளிதழ் எந்த மாதிரியான நாளிதழ் என்று தெரியவில்லைஎன்று வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை.

ஓம்/சரண்யா,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 183/2017 | அரசு தரப்பு | அ.சா.2 |
| பெயர் | சத்யா என்கிற பாரதி | வயது | |
| கணவர் பெயர் | மதன் | முகவரி | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 20th day of June 2025.

**(நான் சென்னை நீதிமன்ற வளாகத்திலிருந்து காணொலி மூலமாக சாட்சியம் அளிக்கிறேன். எனது அடையாளத்திற்காக ஆதார்கார்டை காண்பிக்கிறேன். காணொலி மூலமாக எதிர்முனையில் உதவியாளர் உமாதேவி, Assistant Programmer, Chennai City Civil Court உடன் இருந்தார்.)**

முதல் விசாரணை

நான் தற்பொழுது சென்னை, மடிப்பாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வேலைக்கு எங்கும் செல்லவில்லை. குடும்ப தலைவியாக இருக்கிறேன். 07-11-2009 ஆம் தேதி அன்று எனது தந்தை வீட்டை விட்டு வெளியில் சென்றவர் மீண்டும் வீட்டிற்கு வரவில்லை என்று எங்கள் வீட்டில் வாடகைக்கு இருக்கும் வனஜா என்பவர் எங்களுக்கு போன் செய்து தெரிவித்தார்கள். எப்பொழுதும் வீட்டிற்கு சீக்கிரமாக வருபவர் அன்றைய தினம் வரவில்லை என்று தகவல் கிடைத்தவுடன் நாங்கள் சென்னையிலிருந்து கிளம்பி கோயமுத்தூருக்கு வந்தோம். எனது தந்தையின்எண்ணிற்கு பலமுறை தொடர்பு கொண்டபோதும் அந்த எண் சுட்ச்ஆப்பாக இருந்தது. எனது தந்தையின் செல்போன் எண் 9786131020 ஆகும். கோயமுத்தூர் வந்து பல இடங்களில் நாங்கள் தேடிப்பார்த்தோம். கண்டுபிடிக்க முடியாததால்

08-11-2009 அன்று சிங்காநல்லூர் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தோம். அதற்கு போலீசார் இன்னும் கொஞ்சம் தேடிப் பார்த்துவிட்டு காவல் நிலையம் வருமாறு கூறினார்கள். அதனால் என் தந்தை எங்கு எல்லாம் செல்வாரோ அங்கு எல்லாம் சென்று அவரை தேடிப் பார்த்துவிட்டு பின்னர் 10-11-2009 அன்று அதே காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தோம். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் புகார்தான் என்னுடைய தந்தை சரண்யா காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ஆகும். அது ஏற்கனவே அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எனது தந்தை காணாமல் போன சுமார் 4 நாட்கள் கழித்து எனக்கும், எனது தங்கை பெயருக்கும் எங்கள் வீட்டின் முன் பகுதியில் கடை வைத்திருந்த பாலுக்கும் என் தந்தை எழுதியதாக இரண்டு கடிதங்கள் வந்தது. அந்த இரு கடிதத்திலும் தன்னை யாரும் தேடவேண்டாம் என்றும், தான் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு சென்று விட்டதாகவும், அதனால் தன்னை தேட வேண்டாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அதில் இருந்த கையெழுத்து எனது தந்தையின் கையெழுத்து இல்லை என்று நாங்கள் அப்பொழுது தெரிந்து கொண்டோம். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் கடிதம்தான் அப்பொழுது வந்ததாகும். அது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 2010 ஜூலை வாக்கில் எனது சித்தப்பா துடியலூர் காவல் நிலையத்தில் ஒரு புகைப்படத்தைப் பார்த்து அது அப்பாவைப்போல் தெரிகிறது என்று கூறினார். எனது சித்தப்பாவின் பெயர் ராமதாஸ். அதன் பின்னர் நாங்கள் அனைவரும் அவினாசி காவல் நிலையத்திற்குச் சென்றோம். அவினாசி காவல் நிலையத்தில் எரிந்த நிலையில்

ஒரு பிணத்தின் புகைப்படத்தை காண்பித்தார்கள். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு புகைப்படங்களையும்தான் அப்பொழுது காண்பித்தார்கள். அந்த புகைப்படம் ஏற்கனவே சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புகைப்படத்தில் இருந்த உடலின்மீது இருந்த சட்டை, பேண்ட் எனது திருமணத்தின்போது எனது தந்தை அணிந்திருந்தார். அவரது கால் மற்றும் அவர் போட்டிருந்த ஷூக்களை வைத்து அது என்னுடைய தந்தைதான் என்று நாங்கள் அடையாளம் காட்டினோம். அந்த சட்டை அடர் நீல நிறத்தில் மஞ்சள் போடுபோட்ட சட்டையாகும். அது சா.பொ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் போலீசார் கேட்டு நாங்கள் கொடுத்ததாகும். அந்த புகைப்படத்தில் எனது தந்தை அணிந்திருந்த உடைதான் சா.பொ.5 புகைப்படத்தில் இருந்த நபரின்மீது காணப்பட்டது. மேலே காண்பிக்கப்பட்ட புகைப்படம் சா.பொ.9 ( இரண்டு எண்ணிக்கைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. சா.பொ.9 புகைப்படமானது எனது திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படமாகும். அதன் பின்னர் போலீசார் விசாரித்து எனது தந்தை கடைசியாக வெங்கடேஷ் என்ற நபரிடம் பேசியதாக கூறினார்கள். பின்னர் சிறித நாட்கள் கழித்து தினசரி நாளிதழைப் பார்த்து எனது தந்தை கொலை செய்யப்பட்ட விவரத்தை தெரிந்து கொண்டோம். எங்களுக்கு சொந்தமாக கோயமுத்தூரில் 49 செண்ட் நிலம் இருந்தது. அதோடு 15 செண்ட் நிலமும் ராமலட்சுமண் நகரில் இருந்தது. அந்த இடத்திற்கு பவர்ஆப் அட்டார்னி போலியாக தயார் செய்து அதை வேறு ஒரு நபருக்கு விற்ற விவரம் தினசரி நாளிதழைப் பார்த்து தெரிந்து கொண்டோம்.

எனது தந்தையை கொலை செய்ததாக வெங்கடேஷ் என்ற நபரை கைது செய்ததாக நாளிதழைப் பார்த்து தெரிந்து கொண்டோம். அந்த நாளிதழில்எனது தந்தையை கருப்பு கலர் சேன்ட்ரோ காரில் அழைத்துச் சென்று வெங்கடேஷ் காரை ஓட்ட மணி என்பவர் பின்னால் அமர்ந்து துண்டால் எனது தந்தையின் கழுத்தை பின்னால் இருந்து இறுக்கி, ஓட்டுனர்இருக்கையில் இருந்த வெங்கடேஷ் இரும்பு ராடால் எனது தந்தையின் தலையில் அடித்து அவரை கொலை செய்து அவினாசி செல்லும் வழியில் பரமசிவம்பாளையம் என்ற இடத்தில் வீசிவிட்டு அடையாளம் தெரியக்கூடாது என்று அதை எரித்ததாக தெரிந்து கொண்டோம். போலீயாக தயாரிக்கப்பட்ட ஆவணங்களை பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்கம் போட்டுப்பார்த்து தெரிந்து கொண்டோம். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் கருப்புநிற வலது கால் ஷூ எனது தந்தையின் ஷூ ஆகும். அது சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் கருப்புநிற இடது கால் ஷூ எனது தந்தையின் ஷூ ஆகும். அது சா.பொ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் சாக்ஸ்கள் இரண்டும் எனது தந்தையினுடையது ஆகும். அது ஏற்கனவே சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கருப்பு நிற சில்வர் பக்கிளுடன் அறுந்த நிலையில் இருந்த பெல்ட் என் தந்தையினுடையது ஆகும். அது ஏற்கனவே சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சட்டைதான் எனது அப்பா அணிந்திருந்ததாகும். அது சா.பொ.5 ஆக ஏற்கனவே குறியீடு

செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் டேப்தான் எனது தந்தையின் கை மற்றும் கால்களை கட்டியதாகும். அது ஏற்கனவே சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் என்னுடைய தந்தையின் புகைப்படம் ஆகும். அது சா.பொ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது தந்தை எங்கள் பெயரில் உள்ள நிலங்களை விற்பது சம்மந்தமாக வெங்கடேஷ் என்பவர் அடிக்கடி வீட்டிற்கு வந்து செல்வதாக எங்களிடம் தெரிவித்துள்ளார். வெங்கடேஷை நான் நேரில் பார்க்கவில்லை. காரணம் நான் திருமணமாகி எனது கணவர் வீட்டில் இருந்தேன். எனது தங்கை எனது அப்பாவுடன் இருந்தபொழுது வெங்கடேஷைப் பார்த்துள்ளார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2009 ல் நான் 9884681092 என்ற எண்ணைப் பயன்படுத்தி வந்தேன். அந்த சமயத்தில் நான் ஒரே செல் நெம்பர் மட்டும்தான் பயன்படுத்தி வந்தேன். அது ஓடோபோன் கம்பெனியைச் சேர்ந்ததாகும். 9786131020 எனது தந்தை பயன்படுத்திய எண் ஆகும். 2009 ஆம் ஆண்டு எனது தங்கையின் செல்போன் எண். 9894357790 ஆகும். அது ஏர்டெல் வகையைச் சேர்ந்தது. அ.த.சா.ஆ.2 கடிதமானது வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த சமயத்தில் சென்னையில்தான் குடியிருந்தேன். அ.த.சா.ஆ.2 ல் கோயமுத்தூர் விலாசம் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அந்த விலாசத்தில்தான் ஆரம்பத்திலிருந்து குடியிருந்து

வந்தோம். முதல் சாட்சியத்தில் நான் குறிப்பிட்ட புகைப்படங்கள் அனைத்தும் சிங்காநல்லூர் காவல் நிலையத்தாரும், அவினாசி காவல் நிலையத்தாரும் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. புகைப்படத்தில் இருந்தது எனது அப்பா என்று நான் தெரிந்த கொண்டபிறகுதான் நான் சாட்சியம் அளித்தேன். 2009 ல் எனது தந்தைக்கு 60 அல்லது 61 வயது இருக்கலாம். 2010 ல் பேப்பரைப் பார்த்து தெரிந்து கொண்டதாக கூறும் நான் அந்த பேப்பரை தற்பொழுது கைவசம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1 முதல் சா.பொ.7 வரை போலீசார் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. காரணம் எனது தந்தை அணிந்திருந்த சட்டை நான் வாங்கிக் கொடுத்ததாகும். அவர் அணிந்திருந்த ஷூ, சாக்ஸ்கள் நாங்கள் வாங்கிக் கொடுத்ததாகும். அதனால் எனக்கு அது நன்றாக அடையாளம் தெரியும். ஒரே மாதிரியான சட்டைகள் மார்க்கெட்டில் கிடைக்கும் என்றால் சரிதான். ஆனால் அப்பாவின் உடலைப் பார்த்தால் எங்களால் அடையாளம் காட்ட முடியும். வழக்கு சொத்துக்களான ஷூ, சட்டை ஆகியவைகள் எனது தந்தையுடையது அல்ல என்று சொன்னால் சரியட்லல. எனது தந்தை அணிந்திருந்ததாக சொல்லப்படும் ஷூ மிக பழைமையானது என்றும்,அதன் அடியில் ஓட்டைகள் காணப்படுகிறது என்று சொன்னால், பல வருடங்கள் ஆனதால் அவ்வாறு உள்ளது. போலீசார் எங்களை நிறைய சந்தர்ப்பங்களில் விசாரித்திருக்கிறார்கள். அவினாசி காவல் நிலைய கு.எண்.1610/2009 ல் சொல்லப்பட்டுள்ள இறந்துபோன நபருக்கும், எனது தந்தைக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

அவினாசி காவல் நிலைய குற்ற எண்ணில் உள்ள நபரின் வயது 30 என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தைக்கு 60 வயது இருக்கும். போலீசார்சொல்லிக் கொடுத்து சா.பொ.6 ல் இருப்பது எனது தந்தை என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. புகைப்படத்தை எங்களிடம் காண்பித்தவுடன் அது எங்கள் தந்தை என்று நாங்கள்தான் கூறினோம். எனது தந்தையின் மரணத்தைப் பற்றி நாளிதழைப் பார்த்து தெரிந்து கொண்டோம் என்று நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. அந்த நாளிதழை நான் வைத்திருக்காத காரணத்தினால் நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கண்டுபிடித்ததாக போலீசார் காட்டுவதற்காக எங்கேயோ கிடைத்த பிணத்தை வைத்து அது எனது தந்தையின் பிணம் என்று நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிதான் பொய்யான ஆவணத்தின்மூலம் சொத்தை அபகரிக்க நினைத்ததாக நான் சாட்சியம் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், போலீசார் சொல்லிக் கொடுத்து எதிரிக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/சத்யா என்கிற பாரதி,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.